<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>
<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

O.S.NO.105/2020 P.W.1

| | | |
|---|---|---|
| NAME | | மணி |
| FATHER NAME | - | கங்காதரன் |
| ADDRESS | - | 4/402 T.V. Nagar - SIPCOT, Ranipet |
| OCCUPATION | - | EX - Army |
| AGE | - | 69 |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872

14.07.2025.

<u>குறுக்கு விசாரணை–</u>

எனது பூர்விகம் ராணிப்பேட்டை சிப்காட். பிரதிவாதியை எனக்கு எவ்வாறு தெரியும் என்பதை நான் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். 10 லட்சம் எவ்விதம் வந்தது என்பது குறித்து வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி அவருக்கு பிரச்சனை இருந்ததால் சொத்தை விற்பது குறித்து என்னிடம் தெரிவித்தார். பிரதிவாதி சொத்தை விற்க தான் வந்தார் என்று அவர் என்னை முதலில் அனுகினார் என்று அறிவிப்பிலோ வழக்குரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2017 ல் பிரதிவாதி என்னுடன் கிரைய பதிவு ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி கொண்டதும் அப்போதே 10 லட்சம் என்னிடம் கொடுத்தது பற்றியும் பதில் அறிவிப்பிலும்

எதிர் உரையிலும் சொல்லியுள்ளதற்கு நான் எனது வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் சரி. 2019 ல் பிரதிவாதியிடம் நான் கிரைய முன் பணம் 10 லட்சத்தை கொடுக்கவில்லை. 2017 தான் பிரதிவாதிக்கு 10 லட்ச கிரைய முன் பணத்தை கொடுத்தேன் என்றால் சரி. (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 14.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

14.7.25

Additional District Judge(FTC)
Vellore.